**Kanton Bern**
**Canton de Berne**

Bildungs- und Kulturdirektion
Generalsekretariat

Sulgeneckstrasse 70
3005 Bern
+41 31 633 85 11
gs.bkd@be.ch
www.bkd.be.ch

Bildungs- und Kulturdirektion, Sulgeneckstrasse 70, 3005 Bern

பேர்ண் மாநில மாணவ மாணவிகளின் பெற்றோர்கள் மற்றும்
வளர்ப்பிற்குப் பொறுப்பு வகிப்பவர்களுக்கானது

2020.BKD.1588 / 306464

பேர்ண், 30 சித்திரை 2020

**பாடசாலைகள் மீளவும் திறக்கப்படவுள்ளன**

அன்பான பெற்றோர்கள் மற்றும் வளர்ப்பிற்குப் பொறுப்பானவர்களே
அன்பான மாணவ மாணவிகளே

பாடசாலைகள் தமது கதவுகளை 11. வைகாசி 2020 அன்று மீளவும் திறக்கவுள்ளன. இது குறித்து நாம் மகிழ்வடைகின்றோம்!

கடந்த வாரங்கள் எம் அனைவருக்கும் ஒரு புதிய அனுபவம் மற்றும் பெரிய சவாலாக அமைந்திருந்தன. அனை-வரும் மிகத் திறமையாகத் தமது கடமைகளை நிறைவேற்றியிருந்தனர் - ஆசிரியைகள் மற்றும் ஆசிரியர்கள், பாடசாலை அதிபர்கள், பராமரிப்பு வசதி வழங்கும் சக ஊழியர்கள்- அத்துடன் நிச்சயமாக நீங்களும் உங்கள் குடும்பமும் இதில் அடங்குகின்றீர்கள். இதற்காக அனைவருக்கும் நான் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாடசாலை நடவடிக்கைகள் மீளவும் ஆரம்பிப்பதில் நாங்கள் மிக அவதானத்துடன் நடந்து கொள்ள விரும்புகிறோம். முதல் இரு நாட்களிலும் பாதி வகுப்புக்கே பாடங்கள் நடத்தப்படும், இது குறித்துத் தேவையான தகவல்களை பாடசாலை அதிபர் உங்களுக்கு அறியத்தருவார். ஆசிரியர்கள் மாணவ மாணவிகளிடம் சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை விடயதானமாக்குவதுடன், அதுபற்றிய பயிற்சிகளை வழங்குவார்கள். இந்த நட-வடிக்கைகள் தொடர்ந்துவரும் பாடசாலை நாட்களிலும் அத்துடன் நிச்சயமாக நீண்ட காலத்திற்கும் கடைப்பிடிக்கப்படும். நிலைமையைப் பொறுத்து 13. வைகாசி 2020 தொடக்கம் மீளவும் முழு வகுப்பிற்குமான பாடங்கள் ஆரம்பிக்கப்படும்.

முதல் கட்டத்தில் விசேடமாக, தமது வகுப்பில் எந்தப் பிள்ளைகளுக்கு எவ்விதமான இடைவெளிகள்/குறைபாடுகள் உள்ளன என்பதை அவதானிக்குமாறு நாம் ஆசிரியர்களைக் கேட்டுள்ளோம். பாட-சாலை நாட்கள் மீளவும் வழமைக்குத் திரும்ப அனைவருக்கும் போதுமான காலம் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் ஆரம்பம் முதலே அனைத்தும் சரியாகாது. ஆனால், பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் அத்துடன் உங்களது மனப்பூர்வமான ஈடுபாடுகள், சிறப்பாக ஒத்துழைத்து செயற்படும் நிலையை உருவாக்கும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

இந்த நெருக்கடி காரணமாக பிள்ளைகளுக்கோ அல்லது இளையோர்களுக்கோ எவ்வித தீமையும் ஏற்படக் கூடாது என்பதே எனது முக்கிய கவனமாகவுள்ளது. கோடைவிடுமுறைக்கு முன்பாக வழங்கும் மதிப்பீட்டு அறிக்கையைப் பொறுத்தவரை, புள்ளிகள் வழங்கி சான்றிதழ் வழங்கும் முறை இல்லாமல் ஆசிரியர்களின் பார்வையிலான மதிப்பீடு வழங்கப்படும். அதாவது அடிப்படை ரீதியாக, 16 பங்குனி 2020க்கு முன்பான ஆற்றல்களே கவனத்தில் எடுக்கப்படும், 11 வைகாசி 2020 தொடக்கம் அவர்களது திறமைகளைப் பரீட்சிப்பதுடன், அதைப் போதிய அளவிவில் ஆழமாக்கப் பயிற்சிகள் வழங்கப்படலாம். முழு மதிப்பீட்டைப் பொறுத்தவரை,

மாணவர்கள் அல்லது மாணவிகள் எதில் மேலும் பயிற்சிபெற்றுச் சிறப்படையலாம் என்பது மட்டுமே எடுத்துக்காட்டப்படும்.

மதிப்பீட்டைப் பொறுத்தவரை ஆசிரியர்களது கவனம், கற்கும் வளர்ச்சியில் அதிக பெறுமதியை வைப்பதுடன், அடுத்த பாடசாலை வருடத்திற்கான பிள்ளைகள் மற்றும் இளையோர்களின் இயன்றளவு முன்னேற்றத்தைக் கண்ணோக்குவதிலேயே தங்கியிருக்கும். இதற்குப் பிள்ளைகள் மற்றும் இளையோர்களின் பெரிய ஈடுபாடுகள் மற்றும் சுதந்திரமான செயற்பாடுகள் கௌரவிக்கப்படலாம். புள்ளிகள் வழங்குவதில் மற்றும் பாடசாலை எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் சந்தேகங்கள் இருந்தால் மாணவ மாணவிகளுக்குச் சார்பாகவே முடிவு எடுக்கப்படும்.

உங்கள் மகள் அல்லது மகன் இந்தக் கோடைகாலத்துடன் பாடசாலைக் கல்வியை முடிக்கின்றாரா? தற்சமயம் அவர்கள் இதுவரை ஒரு தொழிற்பயிற்சிக்கான இடத்தைப் பெறாதிருந்தால், இதற்கான ஒப்பந்தத்தை நிறைவேற்றும் காலக்கெடு புரட்டாதி 2020வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை நான் உங்களுக்கு மிக அவதானத்துடன் எடுத்துக்கூற விரும்புகின்றேன். ஆகவே நீங்கள் கைவிட்டு விடாதீர்கள்! உங்கள் மகள் அல்லது மகன் தமக்குப் பொருத்தமான தொழிற்பயிற்சி இடத்தைத் தேட நீங்கள் உதவி வழங்குங்கள். ஆசிரியர்கள், தொழில் ஆலோசனை- மற்றும் தகவல் நடுநிலையம் (BIZ) மற்றும் பாடசாலை பரிசோதகர்களும் இதற்கு உதவ ஆயத்தமாக உள்ளனர்.

அன்பான பெற்றோர்களே மற்றும் வளர்ப்பிற்குப் பொறுப்பானவர்களே, அன்பான மாணவ மாணவிகளே, நீங்கள் கடந்த பிரச்சினையான வாரங்களில் சாதித்த அனைத்திற்காகவும், நான் உங்களுக்கு எனது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மாணவ மாணவிகள், குடும்பங்கள், பாடசாலைகள் அனைவரும் ஒன்றுசேர்ந்து இதுவரை இந்த நெருக்கடியைத் தீர்த்துள்ளோம். நாங்கள் ஒரு சமூகமாக உள்ளோம். உங்களுக்கும் எம் அனைவருக்கும் விரைவில் மீண்டும் வழமையான நாட்கள் திரும்புமென நம்புவதுடன், எனது அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் அனைத்தும் நலமாக அமைய நான் வாழத்துவதுடன் எனது இதயபூர்வமான ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**Die Bildungs- und Kulturdirektorin**
**கல்வி- மற்றும் கலாச்சார இயக்குனர்**

Christine Häsler
Regierungsrätin
மாநிலப் பேரவை உறுப்பினர்